செ. கு. எண்:228

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 26.8.2013

திருநெல்வேலி மாவட்டம், சத்திரம் புதுக்குளம் கிராமம், சிதம்பர நகர் பேருந்து நிறுத்தம் அருகே 2.7.2013 அன்று வேன் மீது அரசுப் பேருந்து மோதியதில் வேனில் பயணம் செய்த பாளையங்கோட்டை வட்டம், குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பையா என்பவர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், பாலசுப்பிரமணியபுரத்தைச் சேர்ந்த திரு. சிவன் என்பவரின் மனைவி திருமதி அம்பிகா 3.7.2013 அன்று தேரிவிளை குண்டல், ஒற்றைப்புளி சந்திப்பு அருகே நடந்து சென்று கொண்டிருந்த போது, அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், புக்கத்துறை கிராம் தேசிய நெடுஞ்சாலையில் 10.7.2013 அன்று கார் மீது அரசுப் பேருந்து மோதியதில் காரில் பயணம் செய்த செங்குன்றம், அலமாதியைச் சேர்ந்த திரு. ஜெகதீசன் என்பவரின் மனைவி திருமதி புண்ணியவதி சம்பவ இடத்திலேயும், மற்றும் அவரது மகன் புருஷோத்தமன் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கரூர் நகரம், கரூர் - திருச்சிராப்பள்ளி பழைய பைபாஸ் சாலை அருகே 12.7.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த கரூர் நகரைச் சேர்ந்த திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மகன் ராகவேந்திரா என்கிற விஜய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், கருத்தம்பட்டி கிராமம், கே. ராயர்பாளையம் பிரிவு பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த அரசுப் பேருந்து மீது, 12.7.2013 அன்று லாரி மோதியதில், பேருந்தில் பயணம் செய்த கருத்தம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. தங்கவேல் என்பவரின் மனைவி ராணி என்கிற கோகிலா மணி சம்பவ இடத்திலேயும், அவினாசி வட்டம், சின்னக்கானூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனிச்சாமி என்பவரின் மனைவி கருப்பாயி பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், சேலம் வட்டம், நெய்காரப்பட்டி கிராமம், கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலை அருகே 13.7.2013 அன்று லாரி மீது அரசுப் பேருந்து மோதியதில்

கெங்கவல்லி வட்டம், இந்திரா காலனியைச் சேர்ந்த பேருந்து நடத்துநர் முருகேசன் மற்றும் தர்மபுரி மாவட்டம், பாலகோடு வட்டம், பெரியாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. மாதேஸ் என்பவரின் மகன் பழனி சம்பவ இடத்திலேயும், சேலம் நகரம், நாராயண நகரைச் சேர்ந்த திரு. முகமது லத்தீப் என்பவரின் மகன் உபயதுல்லா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 15.7.2013 அன்றும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், ராஜேந்திரம் வடக்கு கிராமம், மஜ்ரா பட்டவர்த்தி பாலம் பேருந்து நிலையம் அருகே 14.7.2013 அன்று வேன் மீது அரசுப் பேருந்து மோதியதில், நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், மந்தை மடம், சிதம்பரநாதபுரத்தைச் சேர்ந்த வேன் ஓட்டுநர் நாராயணன் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், இரணியல் கிராமம், ஆமத்தான்பொத்தை அருகே 14.7.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த கல்குளம் வட்டம், திக்கணம்கோடு கிராமத்தைச் சேர்ந்த திரு. தாணுபிள்ளை என்பவரின் மனைவி திருமதி ஷகிலா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்; அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டம், சேலம் வட்டம், நெய்காரப்பட்டி கிராமம், கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலை அருகே 13.7.2013 அன்று லாரி மீது அரசுப் பேருந்து மோதியதில் தர்மபுரி மாவட்டம், பாலகோடு வட்டம், பெரியாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பெருமாள் என்பவரின் மகன் மாதேஸ் பலத்த காயமடைந்துள்ளார் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

இந்தத் துயர சம்பங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், சேலம் மாவட்டம், சேலம் வட்டம், நெய்காரப்பட்டி கிராமம், கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலை அருகே 13.7.2013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்துள்ள திரு. மாதேஸ்க்கு 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9